2017

2017

401796

Io. of Printed Pages : 3

**6951**

*Register Number*

முதலாம் ஆண்டு

# கற்கும் குழந்தை

**First Year**

# THE LEARNING CHILD

(Tamil Version)

நேரம் : 3 மணி

மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அவற்றை அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** பகுதி **அ** மற்றும் பகுதி **இ** - ல் உள்ள வினாக்களுக்கு **1** வரிக்கு **5** வார்த்தைகள் வீதமும், ஒரு பக்கத்திற்கு **20** வரிகளுக்கு மிகாமலும் விடையளிக்க வேண்டும்.

## பகுதி - அ

**I.** **அனைத்து** வினாக்களுக்கும் **100** வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். **15x2=30**

1. "புலன் இயக்கப் பருவம்" – சிறு குறிப்பு வரைக.

2. குழந்தைகளின் மொழி வளர்ச்சியில் தொலைக்காட்சியின் தாக்கம் யாது ?

3. சினம் ஏற்படுத்தும் விளைவுகள் யாவை ?

4. கவனித்தல் பற்றிய மக்டுகல் கருத்து யாது ?

5. ஆசிரியர்கள் மீது மாணவர்களுக்கு விருப்பம் ஏற்படுவதற்கான காரணங்கள் நான்கினை பட்டியலிடுக.

6. பள்ளியை விட்டு இடைநிற்போரின் எண்ணிக்கை குறைய நகைச்சுவையின் பங்கு யாது ?

[ Turn over

7. நேர்மையை வெளிப்படுத்தும் ஏதேனும் ஒரு செயல்பாட்டை எழுதுக.

8. 'கற்க கற்றல்' (Learning to Learn) - சிறு குறிப்பு வரைக.

9. யுனெஸ்கோவின் டெலார்ஸ் (1996) அறிக்கை வலியுறுத்தும் கற்றல் திறன்கள் யாவை ?

10. வாய்மொழிக்கற்றல் என்றால் என்ன ? இக்கற்றலுக்கு ஏதுவாக அமைவன யாவை ?

11. பொதுமைக் கருத்து உருவாதலின் "நேர் மாற்றம்" (Positive Transfer) என்றால் என்ன ?

12. அடிப்படை கற்றல் வகைகள் நான்கினை எழுதுக.

13. 'மொழி' குழந்தைகளின் அடிப்படை திறமையாகக் கருதப்படுகிறது. ஏன் ?

14. "கலந்துரையாடலில்" ஆசிரியரின் பங்கினை எழுதுக.

15. ஆக்கத்திறனின் பண்புகள் நான்கினை பட்டியலிடுக.

## பகுதி - ஆ

II. எவையேனும் 10 வினாக்களுக்கு 200 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். **10x4=40**

16. ஆசிரியர் என்ற முறையில் குழந்தைகளின் உடலியக்கச் செயல்பாடுகளுக்கு (Kinesthetic activities) எவ்வாறு பயிற்சி அளிப்பாய் ?

17. மனநலம் உடையவர்களிடம் காணப்படும் பண்புகள் யாவை ?

18. ஆக்கச்சிந்தனையின் படிநிலைகளை விளக்குக.

19. நட்பு மற்றும் நண்பர்களை தேர்ந்தெடுக்க உதவும் காரணிகள் எட்டினை குறிப்பிடுக.

20. இலட்சியங்களை (Ideals) பலர் அமைத்துக் கொள்ளாததற்கான காரணங்களை பட்டியலிடுக.

21. குமரப்பருவத்தில் ஏற்படக்கூடிய சமூக நடத்தை வளர்ச்சிகள் யாவை ?

22. குழந்தைகளின் கற்கும் திறனை எவ்வாறு மேம்படுத்தலாம் ?

23. கற்றலில் நடத்தைக் கொள்கையாளர் அணுகுமுறையில் அறிவுசார்ந்த செயல்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. ஏன் ?

24. பொதுமைக்கருத்து உருவாதலுக்கான காரணிகள் யாவை?

25. கற்பித்தல் கற்றல் செயல்பாட்டில் ஆசிரியர் மூன்று வகை மாணவர்களையும் ஒருங்கிணைத்து செயல்பட முடியுமா ? எவ்வாறு ?

26. ''கற்றல்'' ஒரு சமூக செயல்பாடு''. விளக்குக.

27. தற்கால கல்வி முறை மாணவரை மையமாக கொண்டது. – விளக்குக.

## பகுதி - இ

III. கீழ்க்கண்ட வினாக்களுக்கு **500** வார்த்தைகளுக்கு மிகாமல் விடை தருக. **3x10=30**

28. (அ) பியாஜேவின் அறிதல் திறன் வளர்ச்சியை விவரி.

**அல்லது**

(ஆ) கற்றல் கற்பித்தலில் குழந்தைகளின் கவனத்தை கவர்வதற்கான வழிகளை விளக்குக.

29. (அ) ஒழுக்க வளர்ச்சி பற்றிய உளவியல் கருத்துக்களை எழுதுக. அவை குழந்தையின் வளர்ச்சியில் ஏற்படுத்தும் தாக்கத்தினை ஏதேனும் இரண்டு செயல்பாடுகளோடு விவரிக்கவும்.

**அல்லது**

(ஆ) குழந்தைகளின் மொழிவளர்ச்சி பற்றிய கொள்கைகள் யாவை ? விளக்குக.

30. (அ) செயல்களின் தொகுப்பு அல்லது ஸ்கீமா (Schema) என்பதனை பியாஜேயின் கருத்தோடு விளக்குக.

**அல்லது**

(ஆ) குழந்தையின் ஆக்கத்திறன் வளர பள்ளிகளில் கொடுக்கவேண்டிய செயல்பாடுகளாக நீவிர் கூறும் கருத்துக்கள் யாவை ?

-o0o-